www.tamilarangam.net

# பொதுஜன முன்னணி–விடுதலைப் புலிகளின் நேசக்கரங்களின் பின்னணியில்

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிப் பீடம் ஏறியதைத் தொடர்ந்து 11 ஆண்டு காலமாக தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான இரத்தம் தோய்ந்த இனவாத யுத்தத்திற்கு 'அரசியல் தீர்வு' காணும் 'நல்லெண்ண' நடவடிக்கையாகக் கூறி வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை தளர்த்தியது. விடுதலைப் புலிகள் தலைமை 'நிபந்தனையற்ற பேச்சுக்கும்' 'போர் நிறுத்தத்திற்கும்' தமது ஆயத்தத்தைக் காட்டிக் கொண்டுள்ளதோடு பொருளாதாரத் தடையை தளர்த்தியமைக்கான நல்லெண்ண நடவடிக்கையாக 4 ஆண்டுகளாக தடுத்து வைக்கப் பட்டிருந்த 10 பொலிசாரை விடுதலை செய்தது.

முதலாளித்துவ சி. ல. சு. க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தமது அழைப்பினை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஊடாக விடுதலைப் புலிகள் சந்திரிகா குமாரணதுங்காவுக்கு அழைப்பினைவைத்துள்ளனர். இதற்குப் பதிலாக பேச்சு வார்த்தைகளில் விடுதலைப்புலிகளின் தலைவர் யார் என்பதை கேட்டு கொழும்பு அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு செய்தி அனுப்பியுள்ளது.

அசுர வேகத்தில் இடம் பெறும் இந்த அபிவிருத்திகளை இட்டு இந்நாட்டு தொழிலாளவர்க்கமும் அல்லது ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினரோ எதுவிதமான நப்பாசைகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது என எச்சரிக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தேசிய ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்வதில் இந்நாட்டு முதலாளித்துவவர்க்கத்துக்கு எதுவிதமான யோக்கியதையும் கிடையாது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

17 ஆண்டுகால யூ. என். பி ஆட்சியின் இன ஒடுக்கு முறை பிரச்சாரம் தொடர்பாகவோ அல்லது 1983 ல் ஆரம்பமான இனவாத இரத்தம் தோய்ந்த யுத்தம் தொடர்பாகவோ சி. ல. சு. க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதுவிதமான கொள்கை வேறுபாடும் கிடையாது. பொ. ஐ. மு ஆட்சிப் பொறுப்பேற்றதும் யூ. என். பி பாணியில் அவசரகாலச்சட்டத்தை வடக்கு கிழக்கில் நீடித்துள்ளது மட்டுமன்றி எல்லைப்புற பொலநறுவ, அனுராதபுர மாவட்ட கிராமங்களிலும் அவசரகாலச் சட்டம் திணிக்கப்பட்டுள்ளது. இனவாத யுத்தம் தொடர்பாக நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பொதுமக்கள் காட்டிக்கொண்ட வெறுப்புக்கு இடையிலேயே இவையெல்லாம் நிகழ்ந்துள்ளன. அத்தோடு இந்த பேச்சுவார்தைகள் முறிவடையும் நிலையில் பொ. ஐ. மு அரசாங்கம் யுத்தத்தை தொடருமென அரசாங்க 'டெயிலி நியூஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சனை சம்பந்தமான இந்த அசுர வேகம் வெறுமனே பாக்குத்தொடுவாய்க்கும் டொன்ரோறா முனைக்கும் இடைப்பட்ட ஒரு தோற்றப்பாடாக அல்லாமல் அனைத்துலகரீதியான அபிவிருத்தியாக இடம்பெறுவதை நாம் நினைவில் கொண்டாக வேண்டும். பில் கிளிங்ரனின் நேரடிக் கண்காணிப்பிலான சியோனிச இஸ்ரேல் –பிஎல்ஓ ஒப்பந்தமும் சரி, நிறவெறி தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் ஒப்பந்தமும் சரி விடுதலைப் புலிகளின் இயக்கக் கடிதம் சந்திரிக்கா குமாரணதுங்காவின் கைக்குள் கிடைப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் அயர்லாந்தில் ஐ ஆர் ஏ தலைமைசெய்து கொண்டுள்ள போர்நிறுத்தமும் சரி ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் அபிலாசைகளின் பேரிலானது அன்று. மாறாக வங்குறோத்து அடைந்துகொண்ட தேசியவாத தலைமைகள் ஒடுக்குமுறை அரசின் பொலிஸ்கார சேவைக்குதம்மை அமாத்திக் கொண்டுள்ளமையை பி. எல். ஓ , ஆ. தே. கா , ஐ. ஆர். ஏ நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றுது. ஆகஸ்ட் 20ம் திகதி காசா முனையில் சேவையில் ஈடுபட்டுள்ள பொலிசார் பதினேழு வயதான பலஸ்தீனிய இளைஞனை சுட்டுவீழ்த்தியுள்ளனர். நெல்சன் மணட்லே தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் நிறவெறி வெள்ளையர் அரசின் சிறைச்சாலைகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளார். வடக்கு கிழக்கில் ஏற்கனவே தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை தனது இரும்புக் கரங்களினுள் அடக்கிக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களை பொறுத்த மட்டினும் இதற்கான பின்னடிப்புக்கள் இருக்கும் என எண்ணமுடியுமா? இன்றைய தேசியவாதத் தலைமைகள் உலகளாவியரீதியில் கடைப் பிடிக்கும் இன, மத பிராந்திய பிரிவினைவாதக் கோரிக்கைகளை முதலாளித்துவ அரசின் உயிர் நீடிப்புக்கு கைகொடுக்கும் விதத்தில் விடுதலைப்புலிகள் செயற்படுகின்றது என திட்டவட்டமாக கூற முடியும்.

அத்தோடு சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் தேசியவாதப் பிரச்சினை சம்பந்தமாக நலலெண்ண நடவடிக்கைகளில் ஈடுபடுவது நாம் கடந்த தொழிலாளர் பாதையின் தலைப்புச் செய்தியில் சுட்டிக்காட்டிய 'வம்பளப்பு' தேர்தல் விஞ்ஞாபனங்களின் பொய்மோசடி நடவடிக்கையாக மட்டுமல்ல நாடுமுழுவதிலும் ஏகாதிபத்திய பலதேசியக் கூட்டுத்தாபனங்களின் முதலீடுகள் ஊடுருவிக் கொள்ளவும் இலாபகரமான உழைப்பைச் சுறண்டுவதற்குமான ஒரு நிலைமையை சிருட்டித்துக் கொடுப்பதில் சந்திரிகா அரசாங்கம் முன்னைய யூ.என்.பி அரசாங்கம் விட்ட இடத்தில் இருந்து தொடர இருக்கிறது. பியகம சுதந்திர வர்த்தக வலையத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற பொதுஜன முன்னணி பொலிசாரின் துப்பாக்கிப்பிரயோகமும், தாக்குதலும் இதை நிறுவிக்காட்டுகின்றது.

www.tamilarangam.net

தேசியவாத தனிச்சிறப்புவாதத்தின் நாற்றம் எடுப்புக் காரணமாக பிரபாகரன் தலைமை கையாளும் பொலிஸ்கார வேலைகள் வடக்கு–கிழக்கில் ஏகாதிபத்திய முதலீட்டை விஸ்தரிப்பதற்கு துணைபோகுமென சந்திரிகா குமாரணதுங்கா முதலாளிகள் நம்புகின்றனர்.

வர்க்கப் போராட்டம் உக்கிரம் அடையும் நிலைமையில்–சிறப்பாகத் தொன்மாகாணங்களில் ஏகாதிபத்திய முதலீட்டாளர்களின் சுரண்டல் முதலீட்டிற்கு எதிரான போராட்டம் சகல துறைகளிலும் வெடிக்கும் அச்சுறுத்தலையிட்டு கதிகலங்கிப் போயுள்ள சந்திரிக்கா குமரணதுங்கா அரசாங்கம் அதற்கான முன்னேற்பாடாக தேசியவாத தமிழ் முதலாளித்துவ விடுதலைப்புலிகளுடன் சமரசத்திற்குவரத் தள்ளப்பட்டுள்ளது. பிரேமாதாச ஆட்சிக்காலத்தில் வடக்குக்–கிழக்கில் இருந்த 25,000 படையினரை தென்மாகாணங்களுக்கு தரவிக்கும் அவசியம் ஏற்பட்டதாலேயே பிரேமதாசா, விடுதலைப்புலிகளுக்கு இடையேயான ஐந்த நட்சத்திர ஹோட்டல் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. தமிழ் தேசிய இனத்தினர்க்கு எதிரான இனவாத அடக்குமுறை யுத்தத்தினையும் தெற்கிலான வர்க்கயுத்தத்தினையும் சமகாலத்தில் நடாத்துவது என்புது சாமான்யம் அல்ல என்பதை தேர்தலைத் தொடர்ந்து சிறுபான்மை அரசாங்கத்தை அமைக்கும் சதிகளில் ஈடுபட்டிருந்த யூ. என். பி தலைவர்களும், ஆயுதப்படைத் தளபதிகளும் மட்டுமல்ல சந்திரிகா குமாரதுங்க தலைமையும் நன்கு அறியும்.

இந்த விதத்தில் இந்தப்பேச்சு வார்த்தைகளுக்கு ஒருவிதமான ஜனநாயக அரசியல் தீர்வு முலாம்களைத் தடவும் சமசமாஜ–ஸ்டாலினிச நவஜமாச, இ. தொ. கா தலைவர்களின் முயற்சிகள் படு பிற்போக்கானவை. சமசமாச தலைவர்கள் தொழிலாளர்–ஒடுக்கப்படும்மக்களிடையே ஒரு ஸ்தாபனத்தைக் கொண்டிருந்த காலகட்ட அரசியல் ஆதரவினை இழந்துவிட்ட போதிலும், இந்த மோசடி முதலாளித்துவ முயற்சிகளுக்கு சிகப்புச் சரிகை கட்டும் நடவடிக்கைகளில் ஆளும்வர்க்கம் அவர்களைப் பயன்படுத்துகின்றது.

கடந்த தேர்தலில் முதலாளித்துவ மோசடிப் பிரச்சாரங்களுக்கு மத்தியில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட பு. க. க தேசியஇனப் பிரச்சனை, யுத்தம் தொடர்பாக குறிப்பட்டவற்றை இங்கு சுட்டிக்காட்டுவது பெரிதும் பொருத்தமானது.

இலங்கை–தமிழ்ஈழம் பகுதிகளின் தொழிலாள வர்க்கம் ஒன்றிணைந்து இந்தியத துணைக் கண்டத்தின் தொழிலாளர்களுடன் சேர்ந்து ஏகாதிபத்திய சார்பு முதலாளிவர்க்கத்துக்கு எதிராக கிளர்ந்து எழுவதன் மூலமே யுத்தத்தினை நிறுத்தவும், தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை உறுதிசெய்யவும் முடியும். தொடர்ந்து அதற்கான வேலைத்திட்ட அடிப்படை இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை தமிழ்ஈழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்தை கட்டி எழுப்புவதேயாகும். ஆதலால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பின்வருமாறு கூறுகிறது.

. இனவாதயுத்தத்தினை நிறுத்து ! இது எமது யுத்தமல்ல. யுத்தத்துக்கு ஒருசதமோ ஒரு ஆளோ, ஒரு கருவியோ கொடாதே !

. வடக்கு கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று ! இந்திய இலங்கை உடன்படிக்கையை இரத்துச் செய் ! ஏகாதிபத்திய யுத்த தலையீடுகளுக்கு இடமளியாதே !

. வடக்கு கிழக்கு இலங்கைத் தொழிலாளர்களின் ஐக்கியத்தை கட்டியெழுப்பு ! இலங்கை தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தைக் கட்டியெழுப்பு ! இதற்கு புறம்பான குறுக்கு வழிகள் கிடையாது.

*இக்கட்டுரை தொழிலாளர்பாதை இலக்கம் 451 ல் பிரசுரமாகியது.*

தொடர்புகளுக்கு :

**France**
**RCL Exile Organisation**
**Tel.: 40383102**

**Germany**
**RCL Exile Organisation**
**Postfach 1609**
**74306 Bietigheim**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்